செய்தி வெளியீடு எண்:308/2018 நாள்: 30.05.2018

**துப்புரவு பணியாளர்களுக்கு அரசின் விதிமுறைகளின்படி வழங்கப்படும் ஊதியங்களை கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்!**

**2020ஆம் ஆண்டிற்குள் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் முறையான அரசின் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்ற நடவடிக்கைகள்!!**

**துப்புரவு பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடன் துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் பேசியதாவது:

இந்திய அரசு இந்தியாவில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் முறையை ஒழித்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கிராம நகர பகுதிகளில் துப்புரவு பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு மத்திய மாநில அரசுகள் செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டிற்குள் கிடைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நானும் ஒரு துப்புரவு தொழிலாளியின் குடும்பத்தில் இருந்து வந்தவர்தான். ஆகவே துப்புரவு பணியாளர்களின் அனைத்து பிரச்சனைகளும் நன்றாக உணர்வேன். துப்புரவு தொழிலாளர்கள் அனைவருக்கும் அரசின் குடியிருப்புகள், முறையான மருத்துவ சிகிச்சை, தொழிலாளர்களின் குழந்தைகள் மேற்படிப்பிற்கு கடனுதவிகள் மற்றும் தொழில் கடனுதவிகள் மற்றும் அரசு விதிமுறையின்படி முறையான சம்பளம் போன்ற தேவைகளை 2020 ஆம் ஆண்டிற்குள் வழங்கிட மாண்புமிகு பாரத பிரதமர் உத்திரவின் பெயரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கடந்த நான்கு ஆண்டுகளில் அனைத்து துறைகளும் முன்னேறி வருகிறது. அதனடிப்படையில் நாட்டின் தூய்மையை காக்கும் பணியை மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கும் 100 சதவிகிதம் இந்த திட்டங்கள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்ற அரசு உறுதி பூண்டுள்ளது. ஆகவே தொழிலாளர்களுக்கு அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்து துப்புரவு பணியாளர்களின் கோரிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் கேட்டறிந்தார்.

துப்புரவு பணியாளர்கள் பகுதி வாரியாக கூட்டத்தில் தெரிவித்த ஒத்த கருத்துக்கள் தங்களுக்கு அரசு குடியிருப்பு வசதி, குழந்தைகளின் கல்வி மற்றும் தொழில் கடனுதவிகளை பெறுவதில் வங்கிகளிடம் உடனடித் தீர்வு, தற்காலிக பணியாளர்களுக்கு முறையான சம்பளம் மற்றும் பணி நிரந்தரம், மருத்துவ பரிசோதனை மற்றும் காப்பீட்டு வசதிகள் போன்ற கோரிக்கைகளை அனைத்து பணியாளர்களுக்கும் வேண்டும் என்று துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

பின்னர் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் அலுவலர்களிடம் தெரிவித்து அவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அவற்றை கண்காணித்திடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவிக்கப்படும் என்றும் மேலும் விரைவில் துப்புரவு பணியாளர்களுக்கு அரசு வழங்கும் திட்டங்கள் குறித்து முறையான விழிப்புணர்வு பயிற்சி ஒரு நாள் வழங்கப்படும். இதில் உங்களுடைய அடுத்த தலைமுறை முன்னேற அரசு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.20 இலட்சம் வரை தொழில் மற்றும் கல்வி கடனுதவிகள் வட்டியில்லாமல் வழங்கப்படுவது குறித்தும் மேலும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் துப்புரவு பணியாளர்கள் இப்பயிற்சியில் முறையாக தெரிந்துகொண்டு பயனடைய வேண்டும் என்று துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் துப்புரவு பணியாளர்களின் கோரிக்கையான வீடுகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கவும் வீடுகள் கட்ட தங்களுடைய கட்டுப்பாட்டில் இடங்கள் இல்லை என்றால் வருவாய்த் துறையிடம் கேட்டு பெற்றிடவும் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு திட்டம் பாரத பிரதமர் வீடுகள் வழங்கும் திட்டத்தில் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனையை மேற்கொள்ள துரித நடவடிக்கையை எடுக்கவும் பாரத பிரதமரின் காப்பீட்டு திட்டமான விபத்து காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு திட்டத்தில் அனைத்து துப்புரவு பணியாளர்களை இணைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவிட்டார். மேலும் நிரந்தர மற்றும் தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு அரசு விதிமுறைப்படி குறைந்தபட்ச ஊதியம் முறையாகவும் கண்டிப்பாகவும் வழங்கிட வேண்டும் என்று ஆணையாளர்கள் மற்றும் தொழிலாளர் துணை ஆணையர்களுக்கு உத்திரவிட்டார்.

தொடர்ந்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கள் பகுதிகளில் துப்புரவு பணிகளை செய்து வரும் அனைவரின் தகவல்கள் வீட்டு முகவரியுடன் பதிவு செய்து அந்தந்த அலுவலகத்தில் பதிவேடுகள் பராமரிக்க வேண்டும். ஏனென்றால் நாட்டின் தூய்மையை காக்கும் பணியினை செய்வதில் பெரும் பங்கு வகிக்கும் துப்புரவு பணியாளர்களின் வாழ்க்கை பொருளாதாரம் உயர்ந்திடவும் அவர்களின் அடுத்த தலைமுறையினர் சிறந்து விளங்கி உயர் நிலைக்கு செல்ல வேண்டும் என்று ஓய்வு பெற்ற நீதிபதிகள், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், இந்திய ஆட்சிப்பணியினர், இந்திய காவல் பணியாளர்கள் போன்ற உயர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு செயல்பட்டு வரும் இத்துறையின் செயல்பாடுகள் சிறப்பாக துப்புரவு பணியாளர்களுக்களின் கிடைத்திட வேண்டும் என்று அரசு செயல்பட்டு வருகிறது. ஆகவே துப்புரவு தொழிலாளர்களின் வாழ்க்கையில் தன்னம்பிக்கையை அளித்திடும் வகையில் அனைத்து அரசு அலுவலர்கள் இக்கருத்தை மனதில் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று துப்புரவு பணியாளர்கள் நல தேசிய ஆணைய உறுப்பினர் மாண்புமிகு திரு.ஜெகதீஸ் ஹிர்மானி அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பகலவன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, மாநகராட்சி ஆணையாளர் திரு.விஜயகுமார், அனைத்து நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
வேலூர்-9.